*செய்தி வெளியீடு எண்: 17* *நாள்: 11.11.2019*

**தேனி மாவட்டம்,**

**மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதலமைச்சர் பொது நிவாரணநிதியின் கீழ் 4 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 1,00,000/- வீதம் ரூபாய் 4 இலட்சத்திற்கான காசோலை மற்றும் 253 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.11.2019) நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை தொடர்பான 454 மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவைஉதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக்கூலி உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, பட்டாகோருதல், பட்டா மாறுதல், கல்விக்கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், காவல்துறை தொடர்பான மனுக்கள், முன்னாள் படைவீரர்கள் மற்றும் வாரிசுதாரர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்கள் வழங்கினார்கள்.

பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களா என்பதனை உடனடியாக விசாரணை மேற்கொண்டு அவர்களுக்கு எந்தவித காலதாமதமுமின்றி விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு 15 நாட்களுக்குள் பதிலளிக்குமாறும், மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள் மீதும், மக்கள் குறைதீர்க்கும் நாளில் பெறப்பட்ட மனுக்கள், முன்னாள் படைவீரர் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பெறப்பட்ட மனுக்கள் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, மனுதாரர்களுக்கு உரிய காலத்தில் பதிலளிக்குமாறு துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் முதலமைச்சர் பொது நிவாரணநிதியின் கீழ் 4 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 1,00,000/- வீதம் ரூபாய் 4 இலட்சத்திற்கான காசோலை மற்றும் தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவியிலிருந்து அறுவவை சிகிச்சை நிதியுதவியாக 1 பயனாளிக்கு 25,000/-க்கான காசோலை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் தேனி வட்டத்திற்குட்பட்ட 51 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட 51 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், போடிநாயக்கனூர் வட்டத்திற்குட்பட்ட 50 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட 50 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட 51 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும், என மொத்தம் 253 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும் என ஆகமொத்தம் 258 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) (பொ) எம்.முருகசெல்வி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**